பக்கங்கள் 20

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 25 வியாழக்கிழமை 08.02.2024 அதிர்வு 192

## பெப்ரவரி 29 இற்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்க!

**தேர்தல் ஆணைக்குழு அவசர வேண்டுகோள்**

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில், தாமதமின்றி பெயர்களைப் பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. 04



# ரணிலுடன் பொன்சேகா நேற்று அவசர சந்திப்பு

## மீண்டும் ஐ.தே.கவில் இணைவாரா?

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி யின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் சுமார் 20 நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது சமகால விவகாரங்கள் பற்றி பேசப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. 04

# சபாநாயகர் முன்னிலையில் பிரியங்கர இன்று எம்.பியாகப் பதவிப் பிரமாணம்!

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக ஜகத் பிரியங்கர இன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்திய புத்தளம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் 04






# மலையக மக்கள் முன்னணியின் மாநாட்டை ஏப்ரல் 26, 27 ஆம் திகதிகளில் நடத்தத் திட்டம்

## கட்சியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. அறிவிப்பு

மலையக மக்கள் முன்னணியின் தேசிய மாநாடும் 35 ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நுவரெலியாவில் அல்லது ஹட்டனில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பான கட்சியின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது என்றும், இதன்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மலையக மக்கள் முன்னணி 1989 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மறைந்த தலைவர் பெரியசாமி சந்திரசேகரனால் ஸ்தாபிக்கப்பட்டது.

மலையகத் தேசியம் மற்றும் உரிமை அரசியலுக்காக ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணியை ஆரம்பத்திலேயே ஓரம் கட்டிவிட வேண்டும் எனப் பலரும் செயற்பட்டு வந்த நிலையில் தனது விடாமுயற்சியின் பயனாகவும் அன்று அவருடன் இணைந்திருந்த இளைஞர்களின் துடிப்பான செயற்பாடுகளாலும் மலையகத்தின் ஒரு மாற்றுக் கட்சியாக உருவெடுத்தது.

யாரும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்த மலையக மக்கள் முன்னணி இலங்கை அரசியல் வரலாற்றில் 1994 ஆம் ஆண்டு ஓர் அரசைத் தீர்மானிக்கின்ற சக்தியாக அது தன்னை அரசியலில் வளர்த்துக்கொண்டது.

“நான் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்பு அமரர் சந்திரசேகரனின் வழியில் இந்தக் கட்சிக்கு தலைமை தாங்கி பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. எனவே, மலையக மக்கள் முன்னணிக்கென ஒரு சரித்திரம் இருக்கின்றது. கடந்த பல வருடங்களாக மாநாட்டை நடத்த முடியாத நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள மாநட்டை மிகவும் சிறப்பாக முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.” – என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. குறிப்பிட்டார்.

மேலும், இந்த மாநட்டில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் இருந்தும் முக்கியஸ்தர்கள் பங்கெடுக்கவுள்ளனர். குறிப்பாக இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து மேடைப் பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது மலையக மக்கள் முன்னணிக்காகவும் அதன் முன்னேற்றத்துக்காகவும் செயற்பட்டவர்கள் அத்துடன் மலையகத்துக்குப் பெருமை சேர்த்தவர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த மாநாடானது மலையக மக்கள் முன்னணியின் ஒரு மைகல்லாக அமையும் என்றும் இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறினார்.

# வைத்தியசாலையில் வைத்து பெண் வைத்தியரை வன்புணர்வுக்குட்படுத்திய ஆண் வைத்தியர் கைது!

பெண் வைத்தியர் ஒருவரை வைத்தியசாலையில் வைத்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய ஆண் வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட மாவனல்ல, அரநாயக்க மாவட்ட வைத்தியசாலையில் சேவையாற்றும் 28 வயதுடைய பெண் வைத்தியரைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அதே வைத்தியசாலையில் சேவையாற்றும் ஆண் வைத்தியரே அரநாயக்க பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.



பாதிக்கப்பட்ட பெண் வைத்தியரின் தந்தை கேகாலை சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருமணமான 45 வயது ஆண் வைத்தியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வைத்தியர் இடமாற்றம் பெற்று கடந்த 5 ஆம் திகதியே அரநாயக்க மாவட்ட வைத்தியசாலைக்கு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வைத்தியரிடமும் சம்பவம் இடம்பெற்றபோது கடமையில் இருந்த ஐவரிடமும் வாக்குமூலங்களைப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

சம்பவத்துக்கு முகம் கொடுத்த பெண் வைத்தியர் கேகாலை போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் தென்னிந்திய நடிகைகளுடன் புகைப்படம் எடுக்க 30 ஆயிரம் ரூபாவா?

## அவர்கள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகையிடுவோம் என்று அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

“யாழ்ப்பாணம் வந்துள்ள தென்னிந்திய நடிகைகளும் நடிகர்களும் எங்களுடைய மக்களுடைய வலிகளையும் துன்பங்களையும் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் யாழ்ப்பாணத்தில் நீங்கள் தங்கியுள்ள இடங்களை முற்றுகையிடுவோம் எனவும், மீண்டும் ஒரு தடவை நீங்கள் யாழ். மண்ணில் கால் பதிக்க முடியாமல் செய்து விடுவோம் எனவும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கின்றேன்.”

– இவ்வாறு அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு.தம்பிராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் நாளை இந்திய பிரபல பாடகர் ஹரிஹரன் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்துக்கு வருகை வந்துள்ள திரைப்பட நடிகர், நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் ஒருவருக்கு ரூபா 30 ஆயிரம் அறவிடப்படும் என்று குறித்த தனியார் நிறுவனத்தால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றைய தினம் சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு.தம்பிராசா நடத்திய ஊடக சந்திப்பிலே மேற்படி விடயத்தை வன்மையாக கண்டித்ததோடு குறித்த செயற்பாடு இடம்பெறுமானால் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு நடிகர், நடிகைகள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகையிடுவோம் என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் என்பது தமிழர்களுடைய பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் உலக அளவில் பெயர் பெற்ற இடமாகும். இந்தியத் திரைப்படங்களில் கூட யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைப் பற்றி பெருமையாகப் பேசியுள்ளார்கள்.

ஆனால், இங்கே சினிமா நடிகர், நடிகைகளை அழைத்து வந்து அவர்களோடு புகைப்படம் எடுப்பதற்குப் பணம் பெறுகின்ற கேவலமான செயலை குறித்த தனியார் நிறுவனம் நடத்த முற்படுகின்றது.

இன்றைக்கும் வலிகாமம் வடக்கில் இரவோடு இரவாக பூர்வீக நிலங்களில்



இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அந்த நிலத்தில் குடியேற முடியாத அவலங்களோடு நில மீட்புக்காகப் போராடி வருகின்றார்கள்.

அப்படியான மக்களுடைய காணிகளை அபகரித்து தன்னுடைய சர்வாதிகார ஆட்சியிலே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கே விசாலமான சொகுசு மாளிகையை அமைத்திருந்தார்.

அந்த மாளிகையை இன்றைக்கு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ரணில் அரசு குறித்த தனியார் நிறுவனத்துக்குத் தாரைவார்த்துள்ளது.

ஆனால், 14 இற்கும் மேற்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய நிலத்துக்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான இழப்பீடுகளோ அல்லது எந்தவிதமான மாற்று ஏற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை.

இந்தநிலையிலே இலட்சக்கணக்கான பணத்தைப் பெற்று யாழ்ப்பாண–த்தில் தனியார் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகத் தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ள இந்திரன் என்பவர் எங்களுடைய மக்களுடைய கலாசாரத்தையும் அழிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைச் சீர்குலைக்கும் முகமாக இவ்வாறான செயற்பாட்டை நடத்த முற்படுகின்றார்.

உண்மையிலேயே நாங்கள் இந்தியக் கலைஞர்களுக்கோ அல்லது சினிமாத் துறையினருக்கோ எதிரானவர்கள் அல்லர்.

எங்களது போராட்டங்களையும், தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் பல தென்னிந்தியத் திரைப்படங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பல தென்னிந்தியப் பாடகர்களும் ஈழத்து வலிகளை வெளிக்கொணரும் முகமாக அல்லது போராட்டத்துக்கு ஆதரவாக தங்களுடைய குரல்களிலே பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

ஆகவே, வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் முகமாக இவ்வாறான பிரபல இசைக் கலைஞர்கள் வந்து இங்கே நிகழ்ச்சி நடத்துவதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர்.

இந்த மண்ணிலே அவர்கள் வந்து எங்கள் கலைஞர்களுடன் இணைந்து இசை நிகழ்ச்சிகளை செய்வதையும் நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம். ஆனால், இவ்வாறான நிகழ்ச்சிகளின் பெயரால் எங்கள் மக்களை வைத்து வியாபாரம் செய்வார்களானால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு எந்தளவுக்குச் சென்று போராடவும் ஒருபோதும் பின்னிற்காது என்பதையும் இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்கின்றோம்.

உண்மையிலேயே புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வந்து இங்கே முதலீடுகளைச் செய்பவர்களால் எங்களுடைய மக்களுக்கோ அல்லது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பையும் அல்லது பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டுமே அல்லாமல் இளைஞர்களைத் திசை திருப்பும் முகமாக எமது தமிழ் இளைஞர்களின் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்கும் முகமாக இவ்வாறு நடிகைகளோடு கட்டணம் கட்டி புகைப்படம் எடுக்கின்ற செயற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இசை நிகழ்வானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மகிழ்விக்கவும் அவர்களை ஆற்றுப்படுத்தவும் இலவசமாகவே நடத்துகின்றோம் என்று சொல்லி நிகழ்வு ஒழுங்குகளைச் செய்தவர்கள் இன்றைக்கு 25 ஆயிரம் ரூபா பெற்று ரிக்கெட் விநியோகிப்பதை நாங்கள் கண்டுகொண்டிருக்கின்றோம்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் விசேட சோதனை
# 24 மணிநேரத்தில் 728 பேர் சிக்கினர்



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 728 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 558 பேரும், குற்றப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 170 பேரும் அடங்குகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 3 பேர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 4 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது, சுமார் 5 கிலோ கஞ்சா, 122 கிராம் ஹெரோயின், 1,852 போதை மாத்திரைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ஊடகவியலாளரின் தந்தை காலமானார்



'தினக்குரல்' பத்திரிகையின் ஊடகவியலாளர் ந.ஜெயகாந்தனின் தந்தையார் சின்னையா நல்லுசாமி (வயது 77) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 144%18, கொழும்பு வீதி, யட்டியாந்தோட்டை (கொமாடுவ) இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியையின் பின்னர் கொமாடுவ மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அன்னார் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சபாநாயகர்...

மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கர இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

1979 இல் பிறந்த ஜகத் பிரியங்கர திக்வல்லை அரச பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், இரண்டாம் நிலைக் கல்வியை வென்னப்புவ ஜோசப் வாஸ் மத்திய கல்லூரியிலும் நிறைவு செய்துள்ளார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தின் இளங்கலைப் பட்டதாரியுமாவார்.

2015 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட ஜகத் பிரியங்கர 31 ஆயிரத்து 424 விருப்பு வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் ஐந்தாவதாகத் தெரிவானார்.

மீண்டும் 2017 இல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட அவர் அதில் உள்ளூராட்சி சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் 2020 இல் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு 40 ஆயிரத்து 724 வாக்குகளைப் பெற்று புத்தளம் மாவட்டத்தில் ஆறாவதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சமுர்த்தி முகாமையாளரான ஜகத் பிரியங்கர, சமுர்த்தி தேசிய அமைப்பு மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளருமாவார். இவர் தினமின, லங்கா தீப மற்றும் மவ்பிம ஆகிய பத்திரிகைகளில் ஊடகவியலாளராகவும், சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளராகவும் செயற்பட்ட மறைந்த எல்.கே. சாம்சன் ஜயந்தவின் புதல்வராவார்.

2007 இல் எம்.வீ. தேதுனுவை மணந்த ஜகத் பிரியங்கர மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

### ரணிலுடன்...

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் சபையில் இருந்து நேற்று வெளிநடப்பு செய்தனர். எனினும், சரத் பொன்சேகா உள்ளிட்ட அக்கட்சியின் 6 எம்.பிக்கள் சபையில் இருந்து ஜனாதிபதியின் உரையைச் செவிமடுத்தனர்.

அத்துடன், பொன்சேகாவுக்கும், சஜித்துக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு விலகப்போவதில்லை என்று பொன்சேகா அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பெப்ரவரி 29இற்கு...

எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிரந்தர வதிவிடத்தை மாற்றாது, திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு வாக்களிக்க முடியாவிட்டாலும் அவர்களது பெயர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

### யாழில்...

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அவர்கள் இந்த மண்ணிலே இருந்து இருப்பதையும் சுரண்டிக்கொண்டு போவதற்காக இந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நுழைந்துள்ளது என்ற கேள்வியையும் நான் இந்த வேளையிலே எழுப்ப விரும்புகின்றேன்.

எனவே, இன்றைக்கு தென்னிந்திய சினிமாத்துறை உலக அளவில் வளர்ந்துள்ளமைக்கு எங்களுடைய ஈழத் தமிழர்களுடைய பங்களிப்பு மிகையாகாது என்பதை பல பிரபலமான சினிமா நடிகர்களும் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்.

ஈழத் தமிழர்களால்தான் தாங்கள் இன்றைக்கு உலக அளவில் பிரபலமாக இருப்பதற்கும், கோடிக்கணக்குகளிலே சம்பளம் பெறுவதற்கும் ஈழத் தமிழர்கள் தான் காரணம் என்பதைக் கூறியுள்ளார்கள்.

குறிப்பாக இன்றைக்கு இந்திய சினிமாவையே கட்டி ஆளுகின்றவர் ஒரு ஈழத் தமிழர். அவர் பல கோடிக்கணக்கிலே அங்கே முதலீடு செய்வதனால்தான் பல இந்திய சினிமா நடிகர்கள் மட்டுமின்றி சினிமாத் துறையை நம்பி இருப்பவர்கள் கூட பல்லாயிரக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே அப்படியாக சினிமாத் துறைக்குப் பங்களிப்பு செய்கின்ற ஈழத் தமிழர்களைக் கேவலப்படுத்தும் முகமாக இந்தத் தனியார் நிறுவனத்தினுடைய செயற்பாடு இடம்பெறுகின்றது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே, இவற்றைத் தென்னிந்திய நடிகைகளும் நடிகர்களும் உணர்ந்து கொண்டு எங்களுடைய மக்களுடைய வலிகளையும் துன்பங்களையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் நீங்கள் தங்கியுள்ள இடங்களை முற்றுகையிடுவோம் எனவும், மீண்டும் ஒரு தடவை நீங்கள் யாழ். மண்ணில் கால் பதிக்க முடியாமல் செய்து விடுவோம் எனவும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கின்றேன்." - என்றார்.



# 200 நாடுகளின் லயன்ஸ் கழகங்களின் தலைவி இலங்கைக்கு வருகை தந்தார்

(அஷ்ரப் ஏ சமத்)

200 நாடுகளில் உள்ள லயன்ஸ் கழகங்களின் தலைவி லயன்ஸ் டாக்டர் பற்றி ஹில் (கனடா) அமெரிக்காவில் வாழ்பவர், கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

கடந்த 30 வருடங்களுக்குப் பின்னர் சர்வதேசத் தலைவி ஒருவர் முதல் தடவையாக இலங்கைக்கு வருகை தந்தி ருந்தார்.

அவர் இலங்கையில் உள்ள லயன்ஸ் 306 சர்வதேச கழகத்தின் தலைவர் லயன்ஸ் இந்கர கௌசல்யா, லயன்ஸ் மகேந்திர அமரசூரிய, மற்றும் லயன்ஸ் மகேஷ் பஸ்க்குல் சர்வதேச பணிப்பாளர்கள் ஆகியோர்கள் கொண்ட ஊடக சந்திப்பொன்று கொழும்பு சங்கரில்லா ஹோட்டல் நடத்தினர்.

இங்கு கருத்து தெரிவித்த சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைவர் டாக்டர் பற்றி ஹில்,

இலங்கை உட்பட 200 நாடுகள் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் அங்கத்துவமாகக் கொண்டுள்ளன. 1958 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச லயன்ஸ் கழகம் ஓர் சமுக சேவை சார்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்தியாவில் இருந்து லயன்ஸ் கழகம் இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது இலங் கையில் 600 லயன்ஸ் கழகங்கள் உள்ளன. 18 ஆயிரம் லயன்ஸ் அங்கத்தவர்களும், 30 ஆயிரம் லியோ ஊறுப் பினர்களாகவும் உள்ளனர். லயன்ஸ் கழகம் அடுத்த வருடத்திலிருந்து இரட்டிப்பாக்கப்படும். இந்த நிறுவனம் உலகில் ஏற்படும் திடீர் இயற்கை அனர்த்தங்கள், உணவு, சுகாதாரம் போஷாக்கு, வீடமைப்பு, அனர்ந்தங்களுக்கும் உடன் உதவும் சர்வதேச சமுக அபிவிருத்தி நிறுவனமாகும்.

இலங்கையில் 2004 ஏற்பட்ட சுனாமி அனர்த் தங்களின்போது 5 மாவட்டங்களில் எமது உதவித் திட்டங் களை வழங்கினோம். அதில் 1300 வீடுகளை நிர்மா ணித்தோம். பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற பாரிய திட்டங்களை முன்னெடுத்து அதனை வெற்றிகரமாக நிர்மாணித்தோம். அதில் மக்கள் இன்றும் நன்மை அடைந்து வருகின்றனர்.

இலங்கையில் 5 வருடத்துக்குப் 10 ஆயிரம் மாணவர்கள் சத்துணவுத் திட்டமொன்றை நாட்டின் பல்வேறு பகுதிகளில் எமது கிளை லயன்ஸ் கழகங்கள் முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம், கண் சத்திர சிகிச்சை, சிரமாதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

5.9 மில்லியன் மக்கள் கடந்த 6 மாதங்களில் லயன்ஸ் கழகத்தின் நன்மை அடைந்துள்ளார்கள். யாழ்ப்பாணம், உட்பட வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் 56 கழகங்கள் உள் ளன. அந்தந்தப் பிரதேச கழகங்கள் தொடர்ச்சியாக அவர்கள் பிரதேசத்தில் பல்வேறு சமூக அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.- என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# பாசாங்குத்தன அழைப்பு

நேற்று நாடாளுமன்றத்தின் புதிய அமர்வை ஆரம்பித்து வைத்து, தமது அரசின் கொள்கை விளக்கப் பிரகடன உரையை ஆற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஐக்கிய முன்னணியினரிடம் (ஜே.வி.பியினரிடம்) ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

2015 முதல் 2019 வரையில் இருந்த - ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான - நல்லாட்சி அரசாங்கத்துடன் ஜே.வி.பி. ஒத்துழைத்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலன் கருதி தற்போதைய அரசாங்கத்துடன் ஏன் ஒத்துழைக்க முடியாது என ஜே.வி.பியிடம் கேள்வி எழுப்பினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஊழல் ஒழிப்பு அலுவலகத்தின் தலைவராக ஆனந்த விஜேபாலவை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவே நியமித்தமையையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க அப்போது நினைவு கூர்ந்தார்.

'எமது தேசத்தைக்கட்டியெழுப்புவதற்கான கனவை நிறைவேற்றுவதற்கு ஒன்றுபடுமாறு' ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது கேட்டுக்கொண்டார்.

''பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் கடந்த காலக் குரோதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு தேசத்தின் நலன் மற்றும் எமது இளைஞர்களின் சுபீட்சத்தைக் கருத்திற்கொண்டு, ஒருமித்த கருத்தை எட்டியுள்ளனர். அதேபோன்று, நான் தனிப்பட்ட முறையில் அரசியல் அரங்கிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் உட்பட, நீண்டகால அரசியல் கூட்டாளிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். பொதுஜன பெரமுனவினால் நன்மைக்காக ஒன்றுபட முடியுமென்றால், ஏன் ஐக்கிய மக்கள் சக்தி அதை பின்பற்ற முடியாது?'' - என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

''தேர்தல்களில் தனித்து போட்டியிடலாம் என்றாலும், தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஒத்துழைப்போம்.

''நமது நாட்டிற்கான பகிரப்பட்ட பார்வை மற்றும் பொதுவான நோக்கத்தைத் தழுவுவதற்கு மீண்டும் ஒருமுறை எனது அழைப்பை விடுக்கிறேன். ஒற்றுமையையும் அறிவொளியையும் வளர்த்து, நமக்குள் ஒரு மாற்றத்தைத் தொடங்குவோம். ஒன்றாக, ஒரு புதிய அரசியல் நெறிமுறையை உருவாக்குவோம், தனிப்பட்ட லட்சியங்களுக்காக அல்ல, மாறாக நமது தேசத்தின் கூட்டு அபிலாஷைகளுக்காக அர்ப்பணிப்போம்.'' - என்றெல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தத்துவம் பேசுகின்றார்.

அவரது இந்தக் கருத்தியல் - அழைப்பு - அவரது பாசாங்குத்தனத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்பது கண்கூடு.

2015 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை எதிர்க்கட்சிகள் சார்பில் நிறுத்தி, அதிகார மாற்றத்தை ஏற்படுத்தி, அதை அடுத்து வந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவோடு நல்லாட்சி அரசைத் தோற்றுவித்தமைக்கு பல நியாயமான காரணங்கள் உண்டு. அந்த முயற்சியில் தமிழர் தேசமும் கூட ஒன்றிணைந்து நின்றது.

2005 நவம்பர் முதல் 2014 இறுதிவரை சுமார் பத்து ஆண்டுகள் காலம் நீடித்த இருண்ட யுக ஆட்சியில் இருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்க வேண்டிய தவிர்க்க முடியாத இக்கட்டுக் கருதி நாட்டு மக்களும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்த சூழல் அது. காலத்தின் கட்டாயமும் கூட.

ராஜபக்ஷகளின் கொடுங்கோன்மையிடமிருந்து நாட்டை விடுவிப்பது மிக அவசரமும் அவசியமும் முக்கியத்துவமும் மிக்க தேசப்பணியாக இருந்தமையால் அரசியல் கட்சிகள் தமக்குள்ளான வேறுபாடுகளை மறந்து அப்போது ஒன்றிணைந்தன.

இப்போது, மொட்டுக் கட்சியுடன் தனி ஒரு எம்.பியாக ரணில் விக்கிரமசிங்க போய் ராஜபக்ஷக்களுடன் இணைந்து, அதன் மூலம் பிரதமராகி, பின்னர் ஜனாதிபதியானமை வேறு. அது, தொடர்ந்து இருண்ட யுக ஆட்சியின் கீழ் நாட்டை வீழ்த்துவதற்கு முன்னெடுத்த அபஸ்வர முயற்சி. ராஜபக்ஷக்களுக்கு எதிராக நாடும் மக்களும் மீண்டும் கொதித்தெழுந்த போது, அதைச் சமாளிக்கவும், ரணில் விக்கிரமசிங்கவின் பதவி ஆசைக்குத் தீனி போடவும் எடுக்கப்பட்ட குறுகிய அரசியல் லாப தந்திரோபாய நடவடிக்கை இது.

நாட்டைச் சூறையாடிய தரப்புக்களை காப்பாற்றும் கேடுகெட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம், தனக்குப் பதவியும் அதிகாரமும் கிட்டுவதற்கு ரணில் விக்கிரமசிங்க என்ற அரசியல் - சுயநலவாதி இப்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கையை, அப்போதைய நல்லாட்சி அரசு ஸ்தாபிக்கக் காரணமான உயர்வான எண்ணத்துடன் சமாந்தரமாக ஒப்பிடுவது அபத்தமானது.

அத்தகைய உயர்ந்த நோக்கம் கொண்ட நல்லாட்சி அரசில் ரணில் விக்கிரமசிங்க போன்ற பதவி ஆசை கொண்ட பிரகிருதிகள் முக்கிய பதவி நிலைகளைக் கைப்பற்றியமையே அந்த முயற்சியும் கூட தோற்றுப் போகக் காரணம் போலும்.




# அம்பிளாந்துறை விளையாட்டு கழகத்துக்கு மூன்று லட்சம் ரூபா நிதியுதவி வழங்கல்

மண்முனை தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அம்பிளாந் துறை வடக்கு சுதந்திரம் விளையாட்டு கழக நிர்வாகிகள், தமது விளையாட்டு கழகத்துக்கான பிரத்தியேக மைதானம் இன்மை தொடர்பில் கோரிக்கை முன் வைத்து வந்தனர்.

இந்த நிலையில், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சி. சந்திரகாந்தனால் மைதான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு முதல் கட்டமாக மூன்று லட்சம் ரூபா நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு கழகத்தினர் பிரத்தியேக விளையாட்டு மைதானம் இன்மை காரணமாக விவசாய நிலங்களில் விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி வந்தனர். பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வந்தனர்.

இதன்போது கட்சியின் மண்முனை தென்மேற்கு பிரதேசக் கிளைத் தலைவர் காமராஜ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும், பிரதேசக் கிளை செயலாளருமான குகநாதன், அரசியல் துறைச் செயலாளர் சபேசன், சுதந்திரம் விளையாட்டு கழக தலைவர் இராஜேந்திரன், செயலாளர் தில்லைவாசன், விளையாட்டு கழக உறுப்பினர்கள், கட்சியின் அம்பிளாந்துறை வடக்கு மற்றும் மேற்கு கிராமியக்குழு நிர்வாகிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலை உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பல்கலைக்கழக மாணவர்களின் சமூக சேவை ஒன்றியத்தால், கல்விக்கு உதவிக்கரம் 2.0 என்ற தொனிப் பொருளின் கீழ் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

நிந்தவூர் ஜேர்மன் நட்புறவு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# சுயதொழில் முகாமைத்துவ பயிற்சியாளருக்குச் சான்றிதழ்

(த.சுபேசன்)

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கு நடத்தப்பட்ட சுயதொழில் முகாமைத்துவ பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பயிலுநர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவி திருமதி ம. தமிழ்ச்செல்வி தலைமையில் தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளன உறுப்பினர்கள், பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பெண்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தத் தினத்தில் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கலந்துரையாடலும் இடம்பெற்றிருந்தது.





# தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் பால்மா பைக்கெட்டுக்கள் வழங்கல்

(ஹஸ்பர்)

ஜனாதிபதி செயலகம் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பால்மா பைக்கெட்டுக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க பிரதேச செயலக மண்டபத்தில் இந்த நிகழ்வில், பால்மா பைக்கெட்டுக்கள் பொன்டெறா நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 12 கிராம சேவகர் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட 90 குடும்பங்களுக்கு ஒருவருக்கு தலா 02 பைக்கட்டுக்கள் வீதம் மொத்தமாக 180 பக்கெட்டுக்கள் வழங்கப்பட்டன.

மந்தபோசனையுடைய பிள்ளைகளின் போசாக்கை அதிகரிக்கும் நோக்கில் இவை வழங்கப்பட்டன.

இதில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், தம்பலகாமம் இராணுவ முகாம் மேஜர் வன்னிநாயக்க, நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் புல்மோட்டையில் ஒருவர் பொலிஸாரால் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மணிபுர பகுதியில் விஷேட பொலிஸ் அதிரடி படையினரின் சுற்றிவளைப்பில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் ஹக்கபட்டஸ் வெடி பொருள்களுடன் நேற்று (07) சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் புல்மோட்டை பி – 10 மணிபுர பகுதியைச் சேர்ந்த புஞ்சிபண்டாகே இந்திக சுகத் பண்டார (31வயது) எனவும் தெரிய வருகிறது.

புல்மோட்டை விசேட பொலிஸ் அதிரடி படையினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து சந்தேக நபர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் எட்டு ஹக்கபட்டஸ் என்று அழைக்கப்படும் வாய் வெடிகள்





என்பவற்றுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரைத் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் புல்மோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.



# வெள்ளத்தில் உடைந்த குளக்கட்டு; அரச அதிபர் நேரடியாகப் பார்வை!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாரிய உடைப்பெடுத்த குளக்கட்டை அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம நேரடியாக சென்று பார்வையிட்டார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள பாலக்கரைச்சி தாமரைகேணி குளக்கட்டில் பாரிய உடைவு ஏற்பட்டிருந்தது.

பாலக்கரைச்சி தாமரைகேணி விவசாய அமைப்பு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் விடுத்த வேண்டுகோளை ஏற்று அரச அதிபர் அங்கு நேரடி விஜயம் செய்தார்.

இதன் போது விவசாயிகளால் குளத்தைப் புனர்நிர்மாணம் செய்யக் கோரி மகஜர் ஒன்றும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டது .





# றோட்டரி மாவட்ட ஆளுநர் கல்முனைக்கு

**(வி.ரி. சகாதேவராஜா)**

றோட்டரி மாவட்டம் 3220 இன் மாவட்ட ஆளுநர் ரொட்டேரியன் ஜெரோம் இராஜேந்திரன் கல்முனைக்கு விஜயம் செய்தார்.

றோட்டரிக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

பின்னர் அவர் தலைமையிலான கூட்டம் கல்முனை வெள்ளைத் தாமரை மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் ஏ. எல். ஏ. நாசர் தலைமையில், செயலாளர் கே . குகதாசன், பொருளாளர் வீ விஜய சாந்தன் உட்பட சகல அங்கத்தவர்களும் பங்குபற்றினர்.

றோட்டரி மாவட்ட செயலாளர் என். றமனா மற்றும் உதவி ஆளுநர் தி .ரகுராம் ஆகியோரும் பங்குபற்றினர். ஆளுநர் கழகத்தின் முன்னேற்றத்துக்குப் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.



# கல்முனையில் சேவை நலன் பாராட்டு விழா!

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சுமார் 15 வருடங்களாகப் பிரதி அதிபராகச் சேவையாற்றி, ஜனவரி 26 ஆம் திகதி ஓய்வுபெற்ற திருமதி எஸ். ஜே.ஏ.கபூருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை நலன்புரிக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குக் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், விசேட அதிதியாக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபருமான ஓய்வு பெற்ற ஏ.சி.எம். தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அதிபர் ஏ. ஜி.எம். றிசாத்தின் வழிகாட்டலிலும், பாடசாலை நலன்புரிச் சங்கத் தலைவர் எம்.ரீ.ஏ.முனாப்பின் தலைமையிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர் திருமதி எஸ். ஜே.ஏ.கபூர் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.







# பாடசாலைகளுக்குக் கணினிகளைக் கூட வழங்க முடியாத நிலையில்தான் நாடு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

வங்குரோத்து நாட்டில் நாட்டை ஆளும் அரசால் பாடசாலைகளுக்குக் கணினிகளைக் கூட வழங்க முடியாதுள்ளது. மக்கள் சார் எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த பணியை வெற்றிகரமாக செய்து வருகிறது.

இது போன்ற பல திட்டங்களை எதிர்க்கட்சி அமுல்படுத்தும் போது, வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டிலும் லஞ்சம், ஊழல், மோசடி, கப்பம் நாளுக்கு நாள் அரங்கேறி வருகின்றன.

மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட பல தரமற்ற மருந்துகளை மக்களுக்கு வழங்கியதால் பலரது வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த மருந்துகளில் இருந்து சுகாதார அமைச்சர் உள்ளிட்ட பல அதிகாரிகள் பெருமளவு தொகையை கெமிஸனாகப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு எதிர்க்ட்சித் தாலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 89 ஆவது கட்டமாக, அனுராதபுரம் இராஜாங்கனை ராகுல மகா வித்தியாலயத்திற்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகள், மீனவர்கள், தொழில் முனைவோர்கள், அரச அதிகாரிகளுக்கு வேறு வழியின்றி இருக்கும் போது, திருடர்கள் கூட்டம் காலம், காலமாகத் திருடி நாட்டையே அழித்து வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்தப் பொருளாதாரக் கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அவர்கள் திருடிய வளங்கள் நாட்டுக்கு மீள பெற்றுக்கொண்டு, கல்வி மற்றும் சுகாதாரத்தில் முதலீடு செய்யப்படும்.

அமைச்சர்களாக அமைச்சுகளின் ஊடக பல்வேறு துறைகளில் அபிவிருத்திகளை முன்னெடுத்தாலும், எதிர்க்கட்சித் தலைவராகவோ, எதிர்க்கட்சி அரசியல் கட்சியாகவோ மக்களுக்கு சேவை செய்வது இதுவே முதல் தடவை. இது மக்கள் கோரிய முறைமை மாற்றத்தின் ஓர் வடிவம் .– என்றார்.

# ‘கொரோனாவுடன் வாழுதல்’ கட்டுரை நூல் வெளியீடு!

**(பழுவூரான்)**

மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும் பௌர்ணமி கலை இலக்கிய தொடரின் 51 ஆவது நிகழ்வாக மகுடம் பதிப்பக வெளியீடான சண் தவராஜாவின் ‘கொரோனாவுடன் வாழுதல்’ கட்டுரை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11) காலை 10 மணிக்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.றஞ்சித மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம விருந்தினராவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், கிழக்கு மாகாண கலாசார திணைக்கள பணிப்பாளர் ச.நவநீதன், கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் க. சித்திரவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இதன்போது வரவேற்புரையை ஊடகவியலாளர் இ.தேவஅதிரனும், நூல் வெளியீட்டுரையை மகுடம் பதிப்பக இயக்குனர் மகுடம் வி. மைக்கல் கொலினும் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு வர்த்தகர் சங்க தலைவர் தேசபந்து மா. செல்வராஜா பெற்றுக்கொள்ள, நூல் தொடர்பான அறிமுகத்தை கிழக்குப் பல்கலைக்கழக ஆரம்ப சௌக்கிய பீடத் தலைவர் வைத்திய கலாநிதி கே. அருளானந்தம் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வை கதிரவன் த. இன்பராசா தொகுத்து வழங்க, கவிதாயினி சுதாகரி மணிவண்ணன் நன்றியுரை ஆற்றவுள்ளார்.

# தமிழரசுக் கட்சித் தலைவர் சிறீதரனுக்கு மருத்துவர் ஒருவரின் திறந்த கடிதம்!

திரு சிவஞானம் சிறீதரன்
தெரிவு செய்யப்பட்ட தலைவர்
தமிழரசு கட்சி

மதிப்புக்குரிய தமிழரசு கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அவர்களே!

தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்றமைக்கு எனது வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். அதேவேளை தமிழர்களின் அதிகளவு வாக்குகளை பெறும் கட்சியின் தலைவராக நீங்கள் பொறுப்பு எடுக்கும் நிலையில் தமிழினத்தின் தேசிய நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுவீர்கள் என்று தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் பெரும் நம்பிக்கையுடன் இருக்கிறோம். இந்த நிலையில் கடந்த காலத்தில் நீங்கள் சில விடயங்களில் செயல்பட்ட விதம் குறித்து தெளிவு படுத்துவது அனைவரது சந்தேகங்களையும் நீக்குவதோடு எதிர்காலத்தில் உங்களுடைய செயல்பாடுகளுக்கான ஆதரவையும் அதிகரிக்கும்.

1. கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக்குள நீர் ஒவ்வொரு வருடமும் வான் பாய்ந்து கடலுக்குள் வீணாக செல்வதை அனைவரும் அறிவோம் என்பதுடன் தொழில் சார் வல்லுநர்கள் அதில் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்துக்கு குடி தண்ணீராக வழங்கலாம் என்று சிபாரிசு செய்திருந்தார்கள். 2023 இல் கூட பெருமளவு நீர் இரணைமடுவில் இருந்து வான் பாய்ந்து கடலுக்குள் சென்று வீணாகியது. ஆனால் நீங்கள் 'இரணைமடு தண்ணீரை யாழ் மாவட்டத்திற்கு வழங்க முடியாது, கிளிநொச்சி மக்களுக்கே அந்த நீர் போதாது' என்பதே உங்களுடைய உறுதியான நிலைப்பாடு என்று தொடர்ச்சியாக கூறி வந்துள்ளமையுடன் யாழ்ப்பாணத்துக்கு நீரை வழங்க மாற்று திட்டமொன்றைத் தேட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்து இருந்தீர்கள் (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது). இப்போது தமிழரசுக் கட்சியின் தேசியத் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்திற்கும் குடிதண்ணீரை வழங்க வேண்டிய தார்மீக பொறுப்பை நீங்கள் கொண்டிருக்கும் வேளையில் தங்களுடைய தற்போதைய நிலைப்பாட்டையும் மாற்று திட்டத்தையும் அறிய ஆவலாக



இரணைமடு தண்ணீர் குறித்து சிறீதரன் கொடுத்த விளக்கம்

August 3, 2020 11:40 am




இரணைமடு குளத்தின் தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு வழங்க முடியாதென நான் கூறியதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் தொடர்பில் விளக்கமளிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது.

இரணைமடு குளத்தில் காணப்படும் தண்ணீரானது கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கே காணமல் உள்ள நிலையில் அதனை யாழ்ப்பாணத்திற்கு கொடுப்பதற்கு முடியாது என்பதே என்னுடைய உறுதியான நிலைப்பாடாக காணப்படுகின்றது. அதனால் மாற்றுத் திட்டமொன்றினை தேடவேண்டிய நிலையில் நாம் அனைவரும் உள்ளோம்.

'முன்னாள் போராளிகள் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு விஷ ஊசி ஏற்றப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறார்கள். அவ்வாறானவர்களில் சிலருக்கு ஏற்றப்பட்ட விச ஊசிகளுக்கு எதிரா சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஆனால் அவற்றை வெளிப்படுத்தக் கூடிய சூழல் தற்போது இல்லை. வைத்திய பரிசோதனை மேற்கொண்ட வைத்தியராகினும்சரி பாதிக்கப்பட்ட முன்னாள் போராளியாகினும் சரி அதுதொடர்பில் வெளிப்படையாக பேசினால் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே, சம்மந்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் அவர்கள் உண்மைகளை வெளிப்படுத்த தயாராக இருக்கின்றனர்'.

இந்த விச ஊசி விவகாரத்தில் உண்மை இருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் என்னிடமுள்ளது. இதற்கு சர்வதேச பாதுகாப்பு வழங்கப்படுமாக இருந்தால் நான் ஆதாரத்துடன் நிரூபிப்பேன் என்றார்.



இருக்கிறோம்.

2. நீங்கள் கடந்த காலத்தில் 103 போராளிகள் விஷ ஊசியினால் இறந்தார்கள் என்றும் இன்னும் பலர் நோய்வாய்ப்பட்டு இருக்கின்றனர் எனவும், இது தொடர்பான ஆதாரங்கள் உங்களிடம் இருப்பதாகவும் சர்வதேச பாதுகாப்பு வழங்கப்பட்டால் இதை நிரூபிப்பேன் என்று தெரிவித்து இருந்தீர்கள் (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது). விஷ ஊசி முன்னாள் போராளிகளுக்கு ஏற்றப்பட்டதாக நீங்கள் தெரிவித்த கருத்தால் பல முன்னாள் போராளிகள் குறிப்பாக பெண்கள் திருமண பந்தத்தில் இணைய முடியாமல் சமூகத்தினால் களங்கப்படுத்தப்பட்டு (stigma) நோயாளிகளாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். முன்னாள் போராளிகளை பரிசோதித்த நானும் ஏனைய மருத்துவ நிபுணர்களும் விஷ ஊசி ஏற்றப்பட்டதற்கு எந்த ஆதாரத்தையும் இதுவரை கண்டுபிடிக்காத நிலையில் உங்களிடம் இருப்பதாக தெரிவித்த ஆதாரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தற்போது தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரித்தானிய தூதுவர் உட்பட சர்வதேச தூதுவர்களை சந்தித்து கலந்துரையாடி கருத்துக்களை தெரிவிக்கும் பாதுகாப்பான சூழலில் நீங்கள் இருக்கும் இந்தப் பொன்னான தருணத்தில் உங்களிடம் இருக்கும் விஷ ஊசி தொடர்பான ஆதாரங்களை வெளிப்படுத்த முன்வருவீர்களா?

3. தமிழரசுக் கட்சியின் உட்கட்சித் தேர்தல் இடம்பெறும் போது சிவசேனை சச்சிதானந்தன் முதல் இந்தியாவின் மேளத்துக்கு தாளம் போடுபவர்கள் அனைவரும் உங்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால் இந்தியா '13 ஆம் திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரப் பகிர்வுக்கு அப்பால் இலங்கையில் தமிழருக்கு எதையும் வழங்கத் தயாரில்லை' என்பதை தொடர்ந்து தெரிவிக்கும் நிலையிலும் நீங்கள் தமிழரசுக் கட்சியின் 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டி தீர்வு' என்ற நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளமை ஈழத்து தமிழ் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி உள்ளது. ஆயினும் அந்த தீர்வை அடைவதற்கான உபாயம் மீண்டும் ஒரு தடவை இன்னொரு இளைய தலைமுறை தமிழர்களை உணர்ச்சி வசப்படுத்தி இரத்தக் களரியை ஏற்படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது. ஏற்கெனவே எனது குடும்பம் உட்பட பல தமிழர் குடும்பங்கள் உயிரிழப்புக்களையும் பேரழிவுகளையும் சந்தித்துப் பெருமளவு தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் ஈழத்தமிழர்களின் குடித்தொகை நலிந்து முதலாவது சிறுபான்மையின நிலையில் இருந்து இரண்டாவது சிறுபான்மையினராகும் பேரபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில் உசுப்பேத்தும் அரசியலை விடுத்து ஈழத் தமிழர்களை பலப்படுத்தி சமஷ்டி தீர்வை அடைவதற்கு உங்களின் உபாய மார்க்கம் அல்லது வழி வரைபடம் என்ன என்பதை தமிழர்கள் அனைவரும் அறிய விழைகிறோம்.

நன்றி,

**டாக்டர் முரளி வல்லிபுரநாதன்**

8.2,2024




# பேராதனை விவசாய பீட மாணவரால் தன்னார்வு உணவூட்டும் பணிகள்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நாட்டிலுள்ள எந்தப் பல்கலைக் கழக மாணவர்களாலும் ஆற்றப்படாத சக மாணவர்களுக்கும், பெற்றோருக்கும், நண்பர்களுககும், பல்கலைக்கழக உத்தியோஸ்தர்களுக்கும் சுத்தமானதும், சுகாதாரமானதுமான உணவு பரிமாறும் உணவகம் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களால் நடத்திச் செல்லப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் கருத்தின்படி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் (இதுவொரு உணவுக்கூடம் அல்ல) ஒரு வித்தியாசமான உணவகம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகம் விவசாய பீட மாணவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் பகுதி நேரமாக வேலை செய்து இந்தச் சிறப்பு பணியை மேற்கொள்கின்றனர்.

சுத்தமான உணவு, பானங்கள், இனிப்பு வகைகள், மில்க் ஷேக், கேக், ஐஸ் காபி, மோஜிடோ, டோனட்ஸ், சூப்கள், மிருதுவான சிக்கன் பர்கர்கள், ஹாட் டாக்ஸ், நூடுல்ஸ் போன்றவை நியாயமான விலையில் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# சீதுவை, தம்பதெனிய ஆஸ்பத்திரிக்கு கதிரைகள் அன்பளிப்பாக வழங்கல்



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

எம்.ஆர். சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் சீதுவை, தம்பதெனிய ஆதார வைத்தியசாலைக்கு பரோபகாரி ஒருவரினால் பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கப்பட்டன.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்தே இந்தக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மனித நேய அமைப்பின் உதவியில் மட்டக்களப்பில் சக்கர நாற்காலிகள்!

(பழுவூரான், அஸ்ஹர் இப்றாஹிம்)

மனித நேய அமைப்பின் நிதி உதவியில் மட்டக்களப்பு முதியோர் இல்ல எழைகளின் சிறிய சகோதரிகள் சபை மற்றும் மட்டக்களப்பு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பு ஆகியவற்றுக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு முதியோர் இல்ல எழைகளின் சிறிய சகோதரிகள் சபை அருட் சகோதரிகள் மற்றும் மட்டக்களப்பு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பினர் மட்டக்களப்பு பெம்டோ அமைப்பினரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

லண்டன் மனித நேய அமைப்பின் நிதி உதவியின் ஊடாக மட்டக்களப்பு தீரணியம் திறந்த பாடசாலைக்கு மருத்துவ உபகரணங்களும், முதியோர் இல்ல எழைகளின் சிறிய சகோதரிகள் சபை அருட் சகோதரிகள் சபை, மட்டக்களப்பு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனம் ஆகியவற்றுக்குச் சக்கர நாற்காலிகள் மற்றும் விசேட தேவையுடையவருக்கான சக்கர நாற்காலி என்பன வழங்கப்பட்டன.

தீரணியம் திறந்த பாடசாலை ஸ்தாபகர் உளநல வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூடி ரமேஷ் ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு சக்கர நாற்காலிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட இணைப்பாளர் மீரா சாய்பு, தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலைய அதிபர் அருட் சகோதர் மைக்கல், தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலைய மேலாளர் அருட் சகோதரர் ஸ்டீபன் மெதிவு, பெம்டோ அமைப்பின் பொருளாளர் கணேசமூர்த்தி மற்றும் தீரணியம் திறந்த பாடசாலை பயிற்சி நிலைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# பெரும் போக வேளாண்மை அறுவடை சம்மாந்துறையில்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

சம்மாந்துறை சல்மடு கண்ட விவசாயிகளின் பங்களிப்புடன், விவசாய விரிவாக்கல் நிலையம் ஒழுங்கு செய்திருந்த பெரும் போக வேளாண்மை அறுவடை விழா சல்மடு கண்டத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரீ.எம். நழீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், உதவி விவசாய பணிப்பாளர், விவசாய பாடவிதான உத்தியோஸ்தர், கமநல அபிவிருத்தி உத்தியோஸ்தர்கள், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர், முன்னாள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் உள்ளிட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவிவசாயிகளும்கலந்துகொண்டனர்.



# புகலிடம் நிறுவனத்தின் உட்படுத்தல் கல்வி திட்டம் தொடர்பில் நிகழ்சித்திட்டம்!

(பழுவூரான்)

புகலிடம் நிறுவனத்தால் உட்படுத்தல் கல்விதிட்டத்தைஅமுல்படுத்துவதற்கான விசேட நிகழ்சித் திட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்றது.

புகலிடம் நிறுவனத்தின் அமுலாக்கத்துடன் விசேட தேவைக்குட்பட்ட சிறார்களுக்கான உட்படுத்தல் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்ச்சித் திட்டமாக இது அமைந்துள்ளது.

புகலிடம் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட் திரு சாம் சுபேந்திரனின் பங்குபற்றுதலுடன் அரச உயர் அதிகாரிகளுக்கு புகலிடம் நிறுவனத்தால் விசேட தேவைக்கு உரிய சிறார்களுக்கு மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டது. இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பிரதி பணிப்பாளர்கள், வலய கல்வி அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# பாடசாலைகள் செல்லாது வீடுகளில் இருப்போருக்கு எதிராக நடவடிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கட்டாயக் கல்வி சட்டத்தின்படி 5 வயது முதல் 16 வயது வரையிலான மாணவர்கள் பாடசாலை செல்லாது காரணங்கள் கூறிக்கொண்டு வீடுகளில் உள்ளனர். இவ்வாறு தமது வாழ்வை கல்வி அறிவின்றி சூனியமாக்கும் மாணவர்களை மீளப் பாடசாலைகளில் இணைக்கும் நோக்குடன் வீட்டுத் தரிசிப்பை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஸிக் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது கடைகளிலும் வேறு தொழில் நிறுவனங்களிலும் தொழில் புரிவதோடு, சிலர் யாசகம் கேட்கும் தொழிலிலும், மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களிலும் ஈடுபடுகின்றனர் என்று தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்முனை வலயக் கல்வி அலுவலகம் சாய்ந்தமருது பிரதேச செயலகமும் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ள இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஸிக் தெரிவித்துள்ளார்.



# கல்முனை பிராந்திய சிறுவர்களின் போசாக்கை நிவர்த்தி செய்யக் குழு!

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சிறுவர்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படும் போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சிறுவர் போசாக்கு சம்மந்தமான ஒருங்கிணைப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட செயலகமும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசனின் பங்குபற்றுதலுடன் அவர் முன்னிலையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், உதவிப் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மருத்துவ தாதியர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் கல்முனை பிராந்தியத்தில் போசாக்கு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களும் போசாக்கு குறைபாட்டைத் தீர்ப்பதற்கான வழிகளும் எனும் தலைப்பில் தரவுகளைக் காண்பித்து விரிவுரையாற்றினார்.

போசாக்கு குறைபாடு அதனை கையாள வேண்டிய வழிகள் தொடர்பிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வைத்திய அதிகாரிகளால் ஆலோசனை மற்றும் அவற்றுக்கான பங்களிப்புக்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன் போசாக்குப் பிரச்சினையைக் குறைப்பதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய மாவட்ட சிறுவர் போசாக்கு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வின் போது பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர்களின் போசாக்கு நலன்கருதி அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடாத்துதல், கல்முனை பிராந்தியத்தில் போசாக்கு, சிறுவர் பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்துதல், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்பள்ளிகள், பாடசாலைகள், சமூக ரீதியாக போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுகளை நடத்துதல், உணவு பாதுகாப்பு உணவு உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தி வீட்டுத்தோட்டம், தோட்ட பயிர்ச்செய்கைகளை ஊக்குவித்தல், பாடசாலைகளில் வழங்கப்படும் சத்துணவு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் போசாக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டத்தைக் கண்காணித்தல்.

கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்குக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.





# கல்முனை ஸாஹிரா பொதுக்கூட்டமும் புதிய நிறைவேற்றுக் குழுவினர் தெரிவும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அதிபர் எம்.ஐ ஜாபீரின் தலைமையில் பாடசாலை காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் நடப்பு ஆண்டில் ஏற்பட்ட வெற்றிடத் துக்காகப் புதிய செயலாளராக சட்டத்தரணி ஷஃபி எச் இஸ்மாயில், பிரதி தலைவராக ஏ.எல்.ரஜாப்தீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக ஏ.ஆஷிக், எம்.ஏ.எஸ். ஹில்மிகார், ஏ.எம். சிபான் ஆர்.எம். அல் முஸ்தன்சீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பல பழைய மாணவர்கள் பங்குபற்றினர்.



# வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண கல்வி அபிவிருத்தி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்தவின் பங்களிப்பில் வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் பி.எம் . சார்ள்ஸ், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மூன்று மாவட்டங்களினதும் பாடசாலை அதிபர்கள், கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.






# நிவாரணம் கேட்கவில்லை; உரிமைகளைத் தாருங்கள்

## நாடாளுமன்றத்தில் தி.மு.கவின் எம்.பிக்கள் போராட்டம்

மத்திய இடைக்கால வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்காததை கண்டித்தும், வெள்ள நிவாரணம் வழங்காததை கண்டித்தும் நாடாளுமன்ற வளாகத்தில் காந்தி சிலை முன்பு தி.மு.க. கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் கருப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மத்திய இடைக்கால வரவு செலவு திட்டத்தை கடந்த 1 ஆம் திகதி நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இந்த நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டிருப்பதாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை நடைமுறைக்கு வந்த பிறகு வரி வசூல் அதிகரித்திருப்பதாக நிதி அமைச்சர் பெருமைப்பட்டுக் கொள்கிறார். ஆனால் மாநிலங்களுக்கான ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகையை இந்த ஆண்டு வழங்குவது குறித்து எந்தவொரு அறிவிப்பு இல்லாமல் இருப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. இதனால் இந்த ஆண்டு மட்டும் தமிழ்நாட்டுக்கு ஏறத்தாழ 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மத்திய வரிகள் மீது கூடுதல்வரிகள் மற்றும் மேல் கட்டணமாக சுமார் 7.5 லட்சம் கோடி ரூபாயினை மத்திய அரசு தொடர்ந்து வசூலித்து வருகிறது. இதனால் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கை மத்திய அரசு தொடர்ந்து பறித்து வருகிறது. கூடுதல் வரி மற்றும் மேல் கட்டணங்களை மாநிலங்களுடன் பகிர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் மத்திய அரசு கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணாகச் செயல்பட்டு வருவது கண்டனத்திற்குரியது.

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பத்தாண்டு காலத்தில் பதினைந்து எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நிதியமைச்சர் சொல்லி இருக்கிறார். 2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, 2019 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை 2024 வரைக்கும் கட்டுமானப் பணிகள் கூட நடக்காமல் கிடக்கிறதே. என்ன காரணம்? இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் எல்லாம் எய்ம்ஸ் அமைத்தவர்கள், தமிழகத்தில் மட்டும் அமைக்காமல் போனதற்கு என்ன காரணம்? தமிழகத்துக்கு மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனை? தமிழக மக்கள் இளித்தவாயர்களா? பாஜகவுக்கு தமிழ்நாட்டில் ஓட்டு இல்லை என்பதுதான் காரணமா?

தமிழ்நாட்டு மக்கள் நலனை முழுமையாகப் புறக்கணித்து, தமிழக வளர்ச்சிக்கு கிஞ்சித்தும் அக்கறை இல்லாமல் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் . இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தி.மு.க. எம்.பி.,க்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவார்கள். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு முன்னால் கறுப்புச் சின்னம் அணிந்து போராட்டமும் நடத்துவார்கள்” என்று கூறியிருந்தார்.

இதற்கமைய, இன்று நாடாளுமன்ற வளாக காந்தி சிலை முன்பு தி.மு.க. கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் கறுப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டி.ஆர். பாலு, ஆ.ராசா, திருமாவளவன் உட்பட தி.மு.க. கூட்டணியின் எம்.பிக்கள் கறுப்பு உடை அணிந்து மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். கையில் பதாகைகளை ஏந்தியவாறு தி.மு.க. கூட்டணியின் மக்களவை மற்றும் மாநிலங்களவை எம்.பிக்கள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

பா.ஜ.க. ஆட்சி இல்லாதா மாநிலங்களுக்கு நிதி வழங்காமல் வஞ்சிக்கப்படுவதை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பது போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இந்த போராட்டம் குறித்து மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் தனது எக்ஸ் பக்கத்தில்,

“மிக்ஜாம் புயலும், பெருமழையும் தமிழ்நாட்டின் இரண்டு முனைகளைப் புரட்டிப் போட்டிருக்கிறது. விவசாயம் , வேலையிழப்பு , கால்நடைகள் இறப்பு, வாழ்விட இழப்பு என உயிரைப் பிடுங்கிச் சென்றது அந்தப் பேரிடர். ஆனால் ஒன்றிய அரசோ வாய்வார்த்தைகளைத் தவிர வேறொன்றையும் வழங்கவில்லை. மத்திய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற காந்திசிலை முன்பு தமிழக எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம். நாங்கள் நிவாரணம் கேட்கவில்லை, எங்களின் உரிமையைத் தாருங்கள்” என்று தெரிவித்துள்ளார்.

# மோடி கூட்டணியை விட்டு எங்கும் செல்லமாட்டேன் பிரதமருடனான சந்திப்புக்கு பிறகு நிதிஷ் குமார் உறுதி



இனி தேசிய ஜனநாயக கூட்டணியை விட்டு எங்கும் செல்லமாட்டேன் என்று பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இண்டியா கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராக பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் தேர்வு செய்யப்படுவார் என பரவலாக பேசப்பட்ட நிலையில், சில நாள்களுக்கு முன்பு அந்த கூட்டணியில் இருந்து வெளியேறி, பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்தார்.

இதனையடுத்து, ஐக்கிய ஜனதா தளம் – பா.ஜ.க. கூட்டணியின் முதல்வராக அவர் மீண்டும் பொறுப்பேற்றார்.

9 ஆவது முறையாக பிஹார் முதல்வராக பதவியேற்ற நிதிஷ் குமார், முதல்முறையாக டில்லியில் பிரதமர் மோடியை நேற்று சந்தித்தார். நிதிஷ் குமார் தலைமையிலான புதிய அரசு எதிர்வரும் 12 ஆம் திகதி பிஹார் சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு கோர உள்ள நிலையில், இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

பிரதமரைத் தொடர்ந்து உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா ஆகியோரையும் நிதிஷ் குமார் சந்தித்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“பிரதமர், உள்துறை அமைச்சர், பா.ஜ.க. தலைவர் ஆகியோரை சந்தித்துப் பேசினேன். நாங்கள் 1995 ஆம் ஆண்டு வாஜ்பாய் காலம் முதல் ஒன்றாக இருக்கிறோம். இரண்டு முறை தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து நான் வெளியேறிவிட்டேன். ஆனால் இனி எங்கும் செல்லமாட்டேன். பிரதமர் நரேந்திர மோடியின் திறமையான தலைமையின் கீழ், பிஹார் மாநிலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தொடர்ந்து வளர்ச்சியின் புதிய உச்சங்களை தொடும் என்று எனக்கு முழு நம்பிக்கை உள் ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியுடன்இணைந்துபுதிய ஆட்சி அமைந் துள்ளது. பொதுமக்களே எஜமானர்கள், அவர் களுக்கு சேவை செய்வதே எங்கள் அடிப்படை நோக்கம். மத்தி யிலும், மாநிலத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், வளர்ச்சிப் பணிகள் வேகம் அடைந்து, பிஹார் மக்கள் முன்னேற்றம் அடைவார்கள்” என்று தெரிவித்தார்.

இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள உள்துறை அமைச்சர் அமித்ஷா,

“பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நிதிஷ் தலைமையிலான என்.டி.ஏ. அரசாங்கம், பிஹாரில் சிறந்த ஆட்சி மற்றும் வளர்ச்சியை முன்னெடுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டணி கதவு திறந்தே இருக்கிறது: அமித் ஷா அழைப்பு, அ.தி.மு.க. மறுப்பு



‘தமிழகத்தில் கூட்டணி கதவுகள் திறந்தே இருக்கிறது’ என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

இந்த நிலையில், பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று அ.தி.மு.க. மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

கடந்த 2019 மக்களவை தேர்தல், 2021 சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து பா.ஜ.க. போட்டியிட்டது. தற்போது பா.ஜ.க. உடனான கூட்டணியை அ.தி.மு.க. முறித்துக் கொண்டது.

இந்த நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமீபத்தில் டில்லியில் ஒரு நாளிதழுக்கு அளித்த நேர்காணலின்போது,

தமிழகத்தில் மக்களவை தேர்தல் வியூகம் மற்றும் அ.தி.மு.க. உடனான கூட்டணி முறிவு குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், “தமிழகம் ஒரு முக்கியமான மாநிலம். மக்களவை தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க. தலை மையில் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் கூட்டணி கதவு திறந்தே இருக்கிறது. பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில், தமிழகம் சார்ந்த வாக்குறுதிகள் அதிகம் இடம்பெறும்” என்று தெரிவித்துள்ளார்.

# விரைவில் கூட்டணி அறிவிப்பு: அன்புமணி தகவல்



மக்களவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் வரவுள்ள நிலையில் தமிழகத்தில் அனைத்து கட்சிகளும் கூட்டணி பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

2026 இல் இடம்பெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் தமது தலைமையில் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க பா.ம.க. திட்டமிட்டுள்ளது.

அதற்கான வியூகங்களை கட்சியின் நிறுவனர் ராமதாஸும், தலைவர் அன்புமணியும் வகுத்து வருகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனால், இந்த மக்களைவத் தேர்தலை ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து சந்திக்க பா.ம.க. முடிவு செய்துள்ளது. அதன்படி, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.கவுடன் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தையில் பா.ம.க. தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.இதுதொடர்பாக நேற்று சென்னையில் பா.ம.க. தலைவர் அன்புமணி செய்தியாளர்களிடம் கூறும்போது,

“கூட்டணி தொடர்பாக சில கட்சிகளுடன் பேசி வருகிறோம். தற்போது வரை யாருடனும் கூட்டணி உறுதியாகவில்லை. கூட்டணி தொடர்பான பா.ம.கவின் நிலைப்பாட்டை விரைவில் தெரிவிக்க இருக்கிறோம். ” – என்றார்.

# பாக்தாத்தில் விமானத் தாக்குதல்: துணை இராணுவத் தளபதி பலி!

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் ஈரான் ஆதரவுடைய துணை இராணுவத் தளபதி கொல்லப்பட்டுள்ளார்.ஈரான் ஆதரவு கட்டாய்ப் ஹிஸ்புல்லா குழுவைச் சேர்ந்த அபு பக்கீர் அல்–சாதி என்ற தளபதியே கொல்லப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாகனமொன்றை இலக்குவைத்து புதன்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அந்த மூவரில் மேற்படி தளபதியும் அடங்குகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடந்த பகுதி, பாக்தாத்தின் கிழக்கே, ஆயுதப் பிரிவுகளின் கோட்டையாக கருதப்படுகிறது.

அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல்களை நேரடியாகத் திட்டமிடுவதற்கும் பங்கேற்பதற்கும் பொறுப்பான



கத்தாயிப் ஹெஸ்பொல்லா தளபதியை கொன்றுள்ளோம் என அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை மையம் தனது எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டுள்ளது.

# பாகிஸ்தானில் பொதுத் தேர்தல்: தொலைத்தொடர்பு சேவை துண்டிப்பு





பாகிஸ்தானில் அதிகரித்து வரும் வன்முறை சம்பவங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இன்று பொதுத்தேர்தல் நடைபெறுகிறது.

பாகிஸ்தானின் 16 ஆவது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இந்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தால் கடந்த டிசம்பர் 15–ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப் பதிவானது மாலை 5 மணி வரை நடைபெறவிருக்கிறது.

பாகிஸ்தானில் உள்ள 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்கு நிலையங்களில் நடைபெறும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க 12.85 கோடி பேர் பதிவு செய்துள்ளனர்.

இந்த தேர்தலில் பல்வேறு வழக்குகளில் சிறையில் இருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி இடையே மும்முனை போட்டி நிலவுகிறது.

65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினர் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த சூழலில், அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தபால் வழியில் தனது வாக்கை செலுத்தியுள்ளார்.

சட்டம் – ஒழுங்கு பாதுகாப்பை கருத்தில் கொண்டு பாகிஸ்தான் முழுவதும் இன்று தொலைத்தொடர்பு இணைய சேவை தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தென்னாபிரிக்க பொதுத் தேர்தலுக்கான திகதி இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும்

தென்னாபிரிக்காவின் இந்த ஆண்டுக்கான பொதுத் தேர்தல் திகதியை இம்மாத இறுதியில் அந்த நாட்டு ஜனாதிபதி சிறில் ரமபோஷா அறிவிப்பார் என ரொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 15 நாள்களுக்குள் தேர்தல் தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிடுவார் என தென்னாபிரிக்க ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளரை மேற்கோள்காட்டி ரொய்டர்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.



வரலாறு காணாத மின்வெட்டு, பின்னடைவான சேவை வழங்கல் மற்றும் அதிக அளவிலான வேலையின்மை போன்ற பல்வேறு விடயங்களில் தென்னாபிரிக்க மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

இந்தநிலையில், அது சிறில் ரமபோசா தலைமையிலான ஆளும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியை பாதிக்கக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1994 இல் நிற அடிப்படையிலான சர்ச்சை முடிவுக்கு வந்த பின்னர் முதல் முறையாக ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அதன் நாடாளுமன்ற பெரும்பான்மையை இழக்கும் என எதிர்வுகூறப்படுகிறது.